
# சுட்டிக் குருவிகள்

(மழலைப் பாடல்கள்)

அகளங்கன்



841.8
அகள
SLIPR

# சுட்டிக் குருவிகள்

(மழலைப் பாடல்கள்)

அகளங்கன்

33382

எழுத்தாளர் ஊககுவிப்பு மையம்
WRITERS MOTIVATION CENTRE
64, கதிர்காமர் வீதி,
அமிர்தகழி,
மட்டக்களப்பு.
தொலைபேசி 065-2226658

சுட்டிக் குருவிகள்
○
மழலைப் பாடல்கள்
○
எழுதியவர்:
அகளங்கன் (நா.தர்மராஜா)
பதிப்புரிமை:
திருமதி.பூ.தர்மராஜா B.A. (Hons)
வெளியீடு:
எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம்
(பிரியா பிரசுரம் -22)
முதற் பதிப்பு:
மார்கழி 2003
அச்சுப் பதிப்பு:
ஏ.ஜே.
கணணி அச்சுக்கோப்பு:
சர்மிளா
விலை :
100/=

**Sutti Kuruvikal**
○
Children Poem
○
Ahalangan
(N. Tharmarajah)

© Mrs. P. Tharmarajah B.A.(Hons)

**Publisher :**
Writers Motivation Centre
(Priya Prasuram -22)

**First Edition :**
December 2003

**Printers :**
AJ

**Typesetting :**
Sharmila

**Price**
100/=

**ISBN 955-8715-14-X**

**இந்நூல்**
இலங்கைத் தேசிய நூல் அபிவிருத்திச் சபையின் அனுசரணையுடன் அச்சிடப்பட்டது. இதன் உள்ளடக்கக் கருத்துக்கள் சபையின் கருத்துக்களைப் பிரதிபலிக்கவில்லை என்பதுடன், இது கையெழுத்துப் பிரதி நிலையில் சபையால் திருத்தம் செய்யப்பட்டது என்பதனைக் கவனித்துக் கொள்ளவும்.

## முன்னுரை

சுட்டிக் குருவிகள் என்ற இத் தொகுப்பிலுள்ள பாடல்கள் யாவும் 3 வயதுக்கு உட்பட்ட பிள்ளைகளுக்காகவே எழுதப்பட்டன.

இப் பாடல்களை, அபிநயம் பிடித்து ஆடுவதற்காகவும், பாடுவதற்காகவும் எழுதினேன்.

வாசிக்கத் தெரியாத பருவம் என்பதனால் பெற்றோர் அல்லது வீட்டிலுள்ளோர் இப் பாடல்களைச் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

பிள்ளை மனனஞ் செய்து பாட யாவரும் கேட்டு மகிழலாம். ஆட பார்த்து மகிழலாம்.

இத்தகைய பாடல்கள் நூலாக வெளிவருவது குறைவு. எனவே தேவையைக் கருதி இம்முயற்சியைச் செய்கின்றேன்.

வழமைபோல இந்நூலாக்கத்திற்கு உதவிய வவுனியா இந்துமாமன்றத் தலைவர் சிவநெறிப்புரவலர் திரு. சீ. ஏ. இராமஸ்வாமி அவர்கட்கும், என் தம்பி க.குமாரகுல சிங்கத்திற்கும்,

பாடிப் பார்த்து ஓசையைச் சரிசெய்ய உதவிய என் மனைவிக்கும்,

இதனை தனது எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தினூடாக வெளியிடும் எனது நண்பர் ஓ.கே. குணநாதன் அவர்களுக்கும் என் நன்றிகள் என்றும் உரியன.

உங்கள் ஆதரவில் என் சிறுவர் இலக்கியப் பணி தொடரும்.

அன்புடன்,
**அகளங்கன்**
(நா.தர்மராஜா)

90, திருநாவற்குளம்,
வவுனியா.

## பதிப்புரை

சுட்டிக் குருவிகள் -

இது எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் 22வது வெளியீடு.

இம் மையத்தினூடாக வெளிவரும் தமிழறிஞர் அகளங்கனின் 3வது நூல்.

ஏலவே இம் மையம் அகளங்கனின் கூவாத குயில்கள், பாரதப் போரில் மீறல்கள் நூல்களை வெளியிட்டிருந்தது.

ஈழத்தில் சிறுவர் இலக்கியம் இன்னும் வளரவில்லை. வளர வேண்டிய துறையும் அதுவே என்பதனைக் கவனத்திற் கொண்டு 3 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களுக்காக (STAGE - 1) எழுதப்பட்ட மழலைப் பாடல்களை வெளியிடுகின்றேன்.

இவை குழந்தைகள் பாடி, ஆடி, மகிழ சிறந்த பாடல்கள்.

குழந்தைகளுக்குப் பெற்றோர்களால் படித்துக் காட்டவும் சிறந்த பாடல்களாக அமைகின்றன.

தமிழறிஞர் அகளங்கன் போன்றோர்களின் நூல்களை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இம் மையத்தினூடாக அகளங்கன் அவர்களின் இன்னும் பல நூல்கள் வெளிவரும்.

அன்புடன்,
**ஓ.கே.குணநாதன்.**
**மேலாளர்,**
**எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம்.**





# கடவுள்

அம்மா அப்பா போலவே
அன்பு காட்டும் தெய்வமே
எம்மை இந்த உலகிலே
இனிது வாழச் செய்யுமே.



## அம்மா

அம்மா நல்ல அம்மா
அடிக்க மாட்டா சும்மா.
பாலும் சோறும் தருவா
பழமும் தின்னத் தருவா
அம்மா நல்ல அம்மா
அருமை யான அம்மா.





## அப்பா

அப்பா நல்ல அப்பா
அன்பு காட்டும் அப்பா
சட்டை வாங்கித் தருவார்
சப்பாத்தும் வாங்கித் தருவார்
சொக்கா வாங்கித் தருவார்
சோக்கான அப்பா.



# பாட்டி

பாட்டி எங்கள் பாட்டி
பாட்டுப் பாடும் பாட்டி
கையை ஆட்டி ஆட்டி
கதைகள் சொல்லும் பாட்டி
சோறு அள்ளி ஊட்டி
தூங்க வைக்கும் பாட்டி.





# படிப்பு

காலை மாலை முகம்கழுவி
கைகால் கழுவி தலைவாரி
கடவுளை வணங்கி புத்தகத்தை
கையில் எடுத்து படித்திடுவோம்.



## படித்துவை

தம்பி ஓடி விழாதே
விழுந்து எழுந்து அழாதே
நம்பிக் காலை எடுத்துவை
நாளை உனதே படித்துவை.





## நாய்க்குட்டி

வாணி வளர்க்கும் நாய்க்குட்டி
வாலை வாலைக் குழைக்குமே
வந்து போகும் ஆட்களைக் கண்டால்
''வள்வள்'' என்று குரைக்குமே.



# கோழிக் குஞ்சு

அக்கா வளர்க்கும் கோழிக் குஞ்சு
அங்கும் இங்கும் சுத்துமே
அடுத்த வீட்டு நாயைக் கண்டால்
"அக்கக்" "அக்கக்" கத்துமே.





# ஆட்டுக் குட்டி


பாமா வளர்க்கும் ஆட்டுக் குட்டி
பாய்ந்து பாய்ந்து சுத்துமே
பாலைக் குடித்துப் பாய்ந்து குதித்துப்
"பா" "பா" என்று கத்துமே.



# பூனைக் குட்டி

மாமா வீட்டுப் பூனைக் குட்டி
மரத்தில் ஏறிக் குதிக்குமே
மீனா கையில் படுத்துக் கிடந்து
"மீயாவ்" "மீயாவ்" கத்துமே.





# பசுக்கன்று

அம்மா என்று கத்துதுபார்
அந்தப் பசுக்கன்று
அதன் அருகே சுத்துதுபார்
தாய்ப்பசு ஒன்று.



# கிளிக் குஞ்சு

பச்சைக்கிளி குஞ்சின் வாயில்
பழத்தை ஊட்டுதே
அச்சாக் குஞ்சு கீ... கீ என்று
அழகாய்ப் பாடுதே.





# மான்


புள்ளி மானே புள்ளி மானே
துள்ளி இங்கே வா வா
பொட்டு வைக்கப் புள்ளி வேண்டும்
அள்ளிக் கொஞ்சம் தா தா.



# குட்டிக் குரங்கு

குட்டிக் குரங்கு போல நான்
குட்டிக் கரணம் போடுவேன்
கெட்டிக் காரன் என்று சொன்னால்
கட்டிப் பிடித்துக் கொஞ்சுவேன்.





# குட்டி முயல்

குட்டி முயலாரே
குட்டி முயலாரே
ஓட்டப் போட்டி
போட்டிடுவோமா - உன்னால்
ஓடி என்னை
முந்த முடியுமா.



# அணில்

மாமரத்தில் ஓடித் திரியும்
அணில்ப் பிள்ளையாரே - நல்ல
மாம்பழத்தைப் பிடுங்கி எனக்கு
தந்திடுவீரே.





# நிலா

ஆகா யத்தில் தெரிகிறது
அழகிய வட்ட நிலவொன்று
இரவில் பார்த்துக் கூப்பிடுவேன்
இனிப்புக் காட்டிச் சாப்பிடுவேன்
பகலில் அதனைக் காணவில்லை
பள்ளிக் கூடம் சென்றதுவோ.



# ஓடுவோம்

புள்ளி மானைப் போல நாம்
துள்ளித் துள்ளி ஓடுவோம்.

குரங்குக் குட்டி போல நாம்
குதித்துக் குதித்து ஓடுவோம்.

பூனைக் குட்டி போல நாம்
புரண்டு புரண்டு ஓடுவோம்.

நாய்க் குட்டி போல நாம்
பாய்ந்து பாய்ந்து ஓடுவோம்.





# ரோஜா

ரோஜா நல்ல ரோஜா
பூக்களுக்கு ராஜா
தண்டில் உண்டு முள்ளு
முள்ளு குத்தும் தள்ளு.



# மல்லிகை

மல்லிகைப் பூவே
மணம் வீசும் மல்லிகைப் பூவே
தங்கச்சியின்ர மூக்குப் போல
அழகான மல்லிகைப்பூவே.



## அகளங்கன்

பல்துறை சார்ந்த இருபத்தியெட்டு நூல்களை வெளியிட்டு பல பரிசில்களைப் பெற்ற எழுத்தாளர் இவர்.

பிரபல பேச்சாளர், கவிஞர், ஆய்வாளர், நாடகாசிரியர், சிறுகதை எழுத்தாளர் எனப் பலதுறைகளில் பிரகாசித்துக்கொண்டு இருப்பவர்.

அரச, அரசசார்பற்ற நிறுவன, சர்வதேச பரிசுகளையும் விருதுகளையும் தனதாக்கிக் கொண்ட தமிழ் அறிஞர்.

முப்பது ஆண்டுகால கலை இலக்கியப் பயணத்தில் பல முத்திரைகளைப் பதித்தவர்.

இவரது சிறுவர் நூல்களான செந்தமிழும் நாப்பழக்கம், முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்தர், கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி, வெற்றிவேற்கை ஆகியவற்றின் உரைவிளக்க நூல்கள் ஏற்கனவே வெளிவந்த போதும் இதுவே சிறுவர் இலக்கியத் துறையின் முதற்பாடல் நூலாகும்.

-ஓ.கே. குணநாதன்.



ISBN 955-8715-14-X 100/=